செ.வெ.எண்:58 நாள்:24.07.2017

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், கரூர் மாவட்டப்பிரிவின் சார்பாக ஜீலை 2017- ம் மாதத்திற்கான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளில் தடகளம், கபடி மற்றும் கோ –கோ போட்டி கரூர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் **29.07.2017**- அன்று காலை **8.30** மணிக்கு நடைபெற உள்ளது.

இது குறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவிக்கையில் ஜீலை 2017- ம் மாதத்திற்கான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளில் தடகளம், கபடி மற்றும் கோ – கோ போட்டி நடைபெற உள்ளது. இப்போட்டியில் பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்கள் கலந்து கொள்ளலாம். தடகளத்தில் மாணவ /மாணவியர்களுக்கு 100 மீ.ஓ, 400 மீ.ஓ, 1500 மீ.ஓ, 3000 மீ.ஓ, நீளம் தாண்டுதல் , குண்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளது. இப்போட்டியில் **12-**ஆம் வகுப்பில் பயிலும் மாணவ/மாணவியர்கள் கலந்து கொள்ளலாம். அதற்கான வயது சான்றிதழ் பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெற்று வருதல் வேண்டும். வயது சான்றிதழ் இல்லாதவர்கள் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. குழுப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் மற்றும் இரண்டாமிடமும், தடகளத்தில் முதல் மூன்று இடங்கள் பெறுபவர்களுக்கு பதக்கம் /சான்றிதழ் வழங்கப்படும்.

எனவே மேற்காணும் போட்டியில் கலந்து கொள்ள கரூர் மாவட்டத்திலுள்ள அனைத்துப்பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் பயிலும் வீரர்/வீராங்கனைகளை கலந்து கொள்ள ஏதுவாக போட்டி **29.07.2017-** அன்று காலை 8.30- மணிக்கு கரூர் மாவட்ட விளையாட்டரங்கத்திற்கு வந்து பெயர்களை பதிவு செய்து கொள்ளவும், மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர், மாவட்ட விளையாட்டரங்கம், மாலநாயக்கன்பட்டி கிராமம், நீதி மன்றம் பின்புறம், தான்தோன்றிமலை 639-005, என்ற முகவரியில் மாதாந்திர விளையாட்டுப் போட்டிக்கான ஒருங்கிணைப்பாளர் தொலைபேசி எண். 9942754053- ல் தொடர்பு கொள்ளுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப, அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**